# மேம்பட்ட எதிர்காலத்திற்கு ஒன்றிணைந்து முன்னேறுவோம்



BUDGET
2025

# முன்னுரை

என் சக சிங்கப்பூரர்களே,

2025, சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்து 60ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. பல தலைமுறை சிங்கப்பூரர்களின் மனவுறுதியாலும் மீள்திறத்தாலும் நாம் தொலைதூரப் பாதையைக் கடந்து வந்துள்ளோம்.

இப்போது பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரை நாம் முன்னெடுத்துச் செல்வதற்கான தருணம் இது.

உலகில், தற்போது நிலையற்ற, நிச்சயமற்ற சூழல் நிறைந்துள்ளது. எதிர்வரும் சவால்களைச் சமாளிக்க, நாம் ஒற்றுமையாக, ஒரு மக்களாகச் செயலாற்றவேண்டும்.

‘முன்னேறும் சிங்கப்பூர்’ திட்டம், நம் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளுக்கு ஒரு வரைவுத்திட்டத்தை முன்மொழிகிறது. நம் சமூக இணக்கத்தை வலுப்படுத்துவதற்காக, நம் கொள்கைகளிலும் மனப்போக்குகளிலும் ஏற்படவேண்டிய மாற்றங்களும் அதில் அடங்கும்.

வரவுசெலவுத் திட்டம் 2025 இந்த இலக்கை முன்னெடுத்துச் செல்லும். இது, சிங்கப்பூரர்கள் அனைவருக்குமான வரவுசெலவுத் திட்டம். இது, உங்கள் அனைவரோடும் இணைந்து உருவாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம்.

நாம் செலவுகளின் சுமையைச் சமாளித்து, மேலும் வலுவான ஆதரவை அளிப்போம் – குடும்பங்கள், மூத்தோர், எளிதில் பாதிப்படையக்கூடிய தரப்பினர் ஆகியோருக்கு.




நாம் புத்தாக்கத்தை ஊக்குவித்து, சுத்தமான எரிசக்தியை விரிவுபடுத்தி, நமது ஊழியர்கள் தங்கள் முழு ஆற்றலை உணரத் தேவையான திறன்கள் கொண்டிருப்பதை உறுதிசெய்து, நாம் நம் வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்துவோம்.

நாம் நீடித்து நிலைக்கத்தக்க நகரத்தை உருவாக்குவதோடு, மேலும் சிறந்த, பசுமையான வருங்காலத்தை அனைவருக்கும் கையகப்படுத்துவோம்.

நாம் பரிவுமிக்க, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவோம் – அதில் ஒவ்வொரு சிங்கப்பூரரும் மதிக்கத்தக்கவராகவும் ஆதரவு மிக்கவராகவும் உணர்வர்.

ஒன்றுபட்ட மக்களாய் மேலும் சிறந்ததோர் எதிர்காலத்தை நோக்கி முன்னேறிச் செல்வோமாக!

**லாரன்ஸ் வோங்**
**பிரதமர்,**
**நிதி அமைச்சர்**



# உள்ளடக்கம்


சிங்கப்பூரர்களுக்கான ஆதரவு
(வழங்கீட்டு அட்டவணை) .......................................................... பக்கம் 6

உங்களுக்கான ஆதரவு
(அனுகூலங்களின் தொகுப்பு)...................................................... பக்கம் 8

மேம்பட்ட எதிர்காலத்தை
உருவாக்க சிங்கப்பூரர்களுக்கு ஆதரவளித்தல்................... பக்கம் 9




ஒன்றுபட்ட மக்களாய் இணைந்து
எஸ்ஜி 60 கொண்டாடுவோம் .................................................... பக்கம் 12

ஊழியர்களை
வாழ்நாள் முழுவதும் ஆயத்தப்படுத்துதல் .......................... பக்கம் 14

தொழில்கள்
வளரவும் வாகை சூடவும் ஆற்றலளித்தல் ........................... பக்கம் 16

நீடித்த
நிலைத்தன்மையுடைய நகரை நிர்மாணித்தல்................. பக்கம் 18



# சிங்கப்பூரர்களுக்கான ஆதரவு

ஏப்ரல் 2025 – மார்ச் 2026



## 2025

### ஏப்ரல்

| | |
|---|---|
| யு-சேவ் [மேம்படுத்தப்பட்டது] | $110 - $190 |
| சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி | 0.5 அல்லது 1 மாதம் |
| பருவநிலைப் பற்றுச்சீட்டுகள் [மேம்படுத்தப்பட்டது] | $400 வரை |

### மே

| | |
|---|---|
| சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள் [புதிது] | $500 |

### ஜூன்

| | |
|---|---|
| எஸ்ஜி60 ActiveSG நிரப்புத்தொகை [புதிது] | $100 |

### ஜூலை

| | |
|---|---|
| எஸ்ஜி60 பற்றுச்சீட்டுகள் [புதிது] | $600 அல்லது $800 |
| மெடிசேவ் | $500 |
| பிள்ளைகளுக்கான LifeSG சிறப்புத்தொகை அல்லது எடுசேவ் கல்விச் சேமிப்புக் கணக்கு / உயர்நிலைப்பள்ளிக்குப் பிந்தைய கல்விக் கணக்கு நிரப்புத்தொகை [புதிது] | $500 |
| யு-சேவ் | $110 - $190 |
| சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி | 0.5 அல்லது 1 மாதம் |

குறிப்பு: அனுகூலங்கள் தனிநபர்கள் அல்லது குடும்பத்தின் தகுதியுடைமைக்கு உட்பட்டவை.

## ஆகஸ்ட்

ரொக்கம்
[பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு] — $450 அல்லது $850

மெடிசேவ்
[பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு] — $150 - $450

## செப்டம்பர்

பெரிய குடும்பங்களுக்கான
LifeSG சிறப்புத்தொகை
[புதிது] (மூன்றாம், அடுத்தடுத்த பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும்) — $1,000

எஸ்ஜி கலாசார
சிறப்புத்தொகை [புதிது] — $100

## அக்டோபர்

யு-சேவ் [மேம்படுத்தப்பட்டது] — $110 - $190

சேவை, பராமரிப்புக்
கட்டணத் தள்ளுபடி — 0.5 அல்லது 1 மாதம்

## டிசம்பர்

ரொக்கம் [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $100 - $600

## 2025 மதிப்பீட்டு ஆண்டு

2025 மதிப்பீட்டு ஆண்டுக்கான
தனிநபர் வருமான வரித்
தள்ளுபடி [புதிது] — $200 வரை

# 2026

## ஜனவரி

சமூக மேம்பாட்டு
மன்றப் பற்றுச்சீட்டுகள் [புதிது] — $300

யு-சேவ் — $110 - $190

சேவை, பராமரிப்புக்
கட்டணத் தள்ளுபடி — 0.5 மாதம்



# உங்களுக்கான ஆதரவு

ஏப்ரல் 2025 – மார்ச் 2026



## உங்களுக்கான அனுகூலங்கள்

- **எஸ்ஜி60 பற்றுச்சீட்டுகள்**
  - 21 - 59 வயது வரையிலான எல்லாச் சிங்கப்பூரருக்கும் ............ $600
  - 60 வயதுக்கும் மேற்பட்ட எல்லாச் சிங்கப்பூரருக்கும் ............ $800
- **ரொக்கம்** 21 வயதுக்கும் மேற்பட்ட எல்லாச் சிங்கப்பூரருக்கும்
  - உத்தரவாதத் தொகுப்புத்திட்டம் ............ $100 - $600
  - குறைந்த, நடுத்தர வருமானச் சிங்கப்பூரர்களுக்குப் பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டுத் திட்டம் ............ $450 அல்லது $850
- **மெடிசேவ்**
  - 65 வயதுக்கும் மேற்பட்ட எல்லாச் சிங்கப்பூரருக்கும் ............ $150 - $450
  - 1950 முதல் 1973 வரை பிறந்த, மெடிசேவ் கணக்குகளில் எஞ்சிய தொகை குறைவாக உடைய சிங்கப்பூரருக்குக் கூடுதல் மெடிசேவ் போனஸ் ............ $500
- **பெரிய குடும்பங்களுக்கான LifeSG சிறப்புத்தொகை**
  - மூன்றாவது, அடுத்தடுத்த பிள்ளைகளுக்கு 1 - 6 வயது வரையிலான ஆண்டுகளில் ............ $1,000
- **பிள்ளைகளுக்கான LifeSG சிறப்புத்தொகை அல்லது எடுசேவ் கல்விச் சேமிப்புக் கணக்கில் / உயர்நிலைப்பள்ளிக்குப் பிந்தைய கல்விக் கணக்கில் நிரப்புத்தொகை**
  - 12 வயதுக்கும் குறைவான எல்லாச் சிங்கப்பூர்ப் பிள்ளைகளுக்கும் LifeSG சிறப்புத்தொகை ............ $500
  - 13 - 20 வயது வரையிலான எல்லாச் சிங்கப்பூர்ப் பிள்ளைகளுக்கும் எடுசேவ் / உயர்நிலைப்பள்ளிக்குப் பிந்தைய கல்விக் கணக்கில் நிரப்புத்தொகை ............ $500
- **எஸ்ஜி60 ActiveSG நிரப்புத்தொகை** எல்லா ActiveSG உறுப்பினர்களுக்கும் ............ $100
- **எஸ்ஜி கலாசார சிறப்புத்தொகை** 18 வயதுக்கும் மேற்பட்ட எல்லாச் சிங்கப்பூரருக்கும் ............ $100
- **தனிநபர் வருமான வரித் தள்ளுபடி**
  - வரி செலுத்தும் எல்லாச் சிங்கப்பூர்வாசிகளுக்கும், 2025 மதிப்பீட்டு ஆண்டில் செலுத்தவேண்டிய வரியில் 60% ............ $200 வரை

## குடும்பங்களுக்கான அனுகூலங்கள்

- **சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்** எல்லாச் சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கும் ............ $800
- **யு-சேவ்** கழக வீடுகளுக்கு ............ $440 - $760
- **சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி** கழக வீடுகளுக்கு ............ 1.5 - 3.5 மாதம் வரை
- **பருவநிலைப் பற்றுச்சீட்டுகள்**
  - எல்லாக் கழக வீடுகளுக்கும் ............ $400 ($100 நிரப்புத்தொகை உள்பட)
  - தனியார் வீடுகளில் வசிக்கும் எல்லாச் சிங்கப்பூர்க் குடும்பங்ளுக்கும் ............ $400

**குறிப்பு**: அனுகூலங்கள் தனிநபர்கள் அல்லது குடும்பத்தின் தகுதியுடைமைக்கு உட்பட்டவை.

# மேம்பட்ட எதிர்காலத்தை உருவாக்க










## சிங்கப்பூரர்களுக்கு ஆதரவளித்தல்

## குடும்பங்களுக்கு உகந்த சிங்கப்பூரை உருவாக்குதல்

- 12 வயதுக்கும் குறைந்த சிங்கப்பூர்ப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தலா **$500 – பிள்ளைகளுக்கான LifeSG சிறப்புத்தொகை**
- 13 முதல் 20 வயதுடைய சிங்கப்பூர் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா **$500 – எடுசேவ் கல்விச் சேமிப்புக் கணக்கு அல்லது உயர்நிலைப்பள்ளிக்குப் பிந்தைய கல்விக் கணக்கில் நிரப்புத்தொகை**
- பிள்ளைப் பராமரிப்புச் செலவைக் குறைக்க அரசாங்க ஆதரவுபெற்ற பாலர் பள்ளிகளில் மாதாந்தர **முழுநாள் பிள்ளைப் பராமரிப்புக் கட்டண உச்சவரம்பைக் குறைத்தல்**
- [புதிது] **பெரிய குடும்பங்களுக்கான ஆதரவுத் திட்டம்**
  - 18 பிப்ரவரி 2025 முதல் பிறக்கும் மூன்றாவது, அடுத்தடுத்த பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும், **பிள்ளை மேம்பாட்டுக் கணக்கின் தொடக்க மானியமாக $5,000 அதிகரிப்பு**
  - 18 பிப்ரவரி 2025 முதல் பிறக்கும் மூன்றாவது, அடுத்தடுத்த பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தாயாரின் மெடிசேவ் கணக்கில் **பெரிய குடும்பங்களுக்கான மெடிசேவ் மானியம் - $5,000**
  - மூன்றாவது, அடுத்தடுத்த பிள்ளைகள் ஒவ்வொருவரும் 1 முதல் 6 வயது உள்ள காலகட்டத்தில், அவர்களின் குடும்பத்திற்கு ஆண்டுதோறும் **பெரிய குடும்பங்களுக்கான LifeSG சிறப்புத்தொகை - $1,000**



## எளிதில் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களின் மீள்திறனை வலுப்படுத்துதல்



- பொது வாடகை வீடுகளில் பிள்ளைகளோடு வசிக்கும் மேலும் அதிகமான குடும்பங்கள், சொந்த வீடு வாங்க உதவ, **புதுத்தொடக்க வீட்டுத் திட்டத்தை** மேம்படுத்துதல்
- **சமூகநலன் (கொம்கேர்) குறுகிய, இடைக்கால, நீண்டகால உதவிக்குக்** கூடுதல் தொகை

## மூத்தோர் நலமாக மூப்படைய துணைபுரிதல்

- [புதிது] ஐந்து ஆண்டு **வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையிலான மெடிசேவ் இணை நிதித் திட்டம்**
- மேலும் அதிகமான குடும்பங்களை உள்ளடக்கும் அதிகரிக்கப்பட்ட **நீண்டகாலப் பராமரிப்பு நிதியுதவிகளும் மானியங்களும்**
- அதிகரிக்கப்பட்ட **வீட்டுப் பராமரிப்பு மானியம் – மாதந்தோறும் $600 வரை**
- **சுறுசுறுப்பான மூத்தோருக்கான மேம்பாட்டுத் திட்டத்தை** விரிவுபடுத்துதல் – தனியார் வீடுகளில் வசிக்கும் சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கு, மூன்று ஆண்டுக்கு



## உடற்குறையுள்ளோருக்கு ஆற்றலளித்தல்




- உடற்குறையுள்ளோரை வேலையில் அமர்த்துவதற்கான சம்பளத்தொகையை ஈடுசெய்ய, **உடற்குறையுள்ளோருக்கான வேலை நியமன உதவித்தொகை** 2028 வரை நீட்டிப்பு
- மேலும் அதிகமான குடும்பங்களை உள்ளடக்கும் வகையில், **உடற்குறையுள்ள பெரியவர்களுக்கான சேவைகளுக்கு** அதிகரிக்கப்பட்ட நிதியுதவி
- உடற்குறையுள்ள எல்லா வயது சிங்கப்பூரர்களுக்கும் வெள்ளிக்கு **வெள்ளி அடிப்படையில், ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டம்**
- சிறப்புத் தேவையுடையோருக்கான அறங்காவல் நிறுவனத்தின் அறங்காவலர் கணக்குகளில், **பராமரிப்பாளர்கள் செலுத்தும் நிரப்புத்தொகைகளுக்கு இணை மானியம்**

# ஒன்றுபட்ட மக்களாய் இணைந்து










# எஸ்ஜி 60 கொண்டாடுவோம்

# SG60 தொகுப்புத்திட்டம்




- ஜூலை 2025இல், 21 - 59 வயதுக்கு இடைபட்ட எல்லாச் சிங்கப்பூரருக்கும் **$600 எஸ்ஜி60 பற்றுச்சீட்டுகள்**
- ஜூலை 2025இல், 60 வயதுக்கும் மேற்பட்ட எல்லாச் சிங்கப்பூரருக்கும் **$800 எஸ்ஜி60 பற்றுச்சீட்டுகள்**
- 2025 மதிப்பீட்டு ஆண்டில், வரி செலுத்தும் எல்லாச் சிங்கப்பூர்வாசிகளுக்கும் **60% தனிநபர் வருமான வரித் தள்ளுபடி** [அதிகபட்சம் **$200**]
- 2025இல் பிறக்கும் எல்லாச் சிங்கப்பூர்க் குழந்தைகளுக்கும் **எஸ்ஜி60 குழந்தை அன்பளிப்பு**

# நமது தேசிய அடையாளத்தையும் சமூகப் பிணைப்புகளையும் வலுப்படுத்துதல்



- ஜூன் 2025இல், எல்லா ActiveSG உறுப்பினர்களுக்கும் **$100 எஸ்ஜி60 ActiveSG நிரப்புத்தொகை**
- செப்டம்பர் 2025இல், 18 வயதுக்கும் மேற்பட்ட எல்லாச் சிங்கப்பூரருக்கும் **$100 எஸ்ஜி கலாசார சிறப்புத்தொகை**
- **கலாசார இணை நிதி - $100 மில்லியன் நிரப்புத்தொகை; 5 ஆண்டு நீட்டிப்பு**
- எஸ்ஜி வழங்கும் **இணை நிதி - $250 மில்லியன்**
- சிங்கப்பூர்ப் பந்தயப்பிடிப்புக் கழகத்தின் **மேம்படுத்தப்பட்ட நிதித் திரட்டுத் திட்டம் - $270 மில்லியன் நிரப்புத்தொகை; 3 ஆண்டு நீட்டிப்பு**
- சுய உதவிக் குழுக்களுக்கு 5 ஆண்டுகளில் **$60 மில்லியன்**
- அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் உணவங்காடி நிலையங்கள், சந்தைகள் ஆகியவற்றில் உள்ள ஒவ்வொரு கடைக்கும் **$600 வாடகை ஆதரவு**
- அடுத்த 20 - 30 ஆண்டுகளில் **உணவங்காடி நிலையங்களை மேம்படுத்தவும் கட்டவும் $1 பில்லியன் வரை**



# ஊழியர்களை







# வாழ்நாள் முழுவதும் ஆயத்தப்படுத்துதல்

## வாழ்நாள் கற்றலை ஊக்குவித்தல்

40 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கான **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் திறன் மேம்பாட்டுத் திட்டம்**

2026 தொடக்கத்திலிருந்து, குறிப்பிட்ட பகுதிநேரப் பயிற்சி வகுப்புகளுக்கு **மாதாந்தரப் பயிற்சிப் படித்தொகை - $300** [புதிது]

2026 தொடக்கத்திலிருந்து, 30 வயதுக்கும் மேற்பட்ட குறைந்த வருமான ஊழியர்களுக்கு, மேம்படுத்தப்பட்ட **வேலைநலன் திறன் ஆதரவுத் திட்டம்**

குறிப்பிட்ட பகுதிநேர, முழுநேரப் பயிற்சி வகுப்புகளுக்கு **மாதாந்தரப் பயிற்சிப் படித்தொகை**




## ஊழியரணி உருமாற்றத்தை ஆதரித்தல்

- பணி மறுவடிவமைப்பிற்கு **70% வரை** நிதி ஆதரவு - **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியரணி மேம்பாட்டு மானியம்** [புதிது]
- 2026ஆம் ஆண்டின் பிற்பாதியில், தகுதிபெறும் நிறுவனங்கள், தகுதிவாய்ந்த ஊழியரணி உருமாற்று முயற்சிகளுக்கான செலவுகளை ஈடுகட்ட, மறுவடிவமைக்கப்பட்ட **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் தொழில்நிறுவன உதவிநிதி - $10,000**
- மேலும் அதிகமான நிறுவனங்கள் உருமாற்றம் காண்பதற்கும், தங்களது ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் உதவ, தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸின் **நிறுவனப் பயிற்சிக் குழு மானியம்** – கூடுதலாக **$200 மில்லியன்**


## வேலை நியமனத்திற்கான ஆதரவை வலுப்படுத்துதல்

- 65 வயது வரையிலான (55 வயதுக்கு மேற்பட்ட) மூத்த ஊழியர்களுக்கு, முதலாளி செலுத்தும் மத்திய சேமநிதிச் சந்தாவின் அதிகரிப்பில் பாதித் தொகையை ஈடுசெய்ய, **மத்திய சேமநிதி சந்தா தொகை அதிகரிப்பிற்கான கழிவு**
- மூத்த ஊழியர்களை வேலையில் அமர்த்துவதற்கான சம்பளத்தொகையை ஈடுசெய்ய, **மூத்த ஊழியருக்கான வேலை நியமன உதவித்தொகை** 2026 வரை நீட்டிப்பு
- முன்னாள் கைதிகளை வேலையில் அமர்த்துவதற்கான சம்பளத்தொகையை ஈடுசெய்ய, **வேலை நியமனத்திற்கான ஊக்குவிப்பு உதவித்தொகை** 2028 வரை நீட்டிப்பு





# தொழில்கள்








# வளரவும் வாகை சூடவும் ஆற்றலளித்தல்

## தொழில் செலவுகளைச் சமாளித்தல்



- நிறுவனங்களுக்கான பலன்கள் (அதிகபட்சம் $40,000)
    - 2025 மதிப்பீட்டு ஆண்டில் செலுத்தவேண்டிய **வருமான வரியில் 50% தள்ளுபடி**
    - 2024இல் குறைந்தது உள்ளூர் ஊழியர் ஒருவரைக் கொண்ட, தற்போது செயல்பாட்டில் உள்ள நிறுவனங்களுக்கான பலன் (குறைந்தபட்சம் **$2,000**)
- 2025, 2026 ஆண்டுகளில் **படிப்படியான சம்பள உயர்வுக்குரிய உதவித்தொகைத் திட்டத்தின்** இணை நிதியை அதிகரித்தல்

## தொழில்நுட்ப, புத்தாக்க வளங்களை மேம்படுத்துதல்



- **தேசிய உற்பத்தித்திறன் நிதிக்கு $3 பில்லியன் நிரப்புத்தொகை**
- **ஆய்வு, மேம்பாட்டு உள்கட்டமைப்பில் $1 பில்லியன் முதலீடு**

## தொழில்நிறுவனச் சூழலை வலுப்படுத்துதல்


- **அனைத்துலகமயமாதல், இணைப்புகள், பற்றுமானங்கள் ஆகியவற்றுக்கான ஆதரவுத் திட்டங்களை** நீட்டித்தல்
- புதிய **தொழில்நிறுவனக் கணினியல் முனைப்புக்கு ($150 மில்லியன் வரை)**
- **$1 பில்லியன் தனியார் கடன் நிதி**
- சிங்கப்பூர் முதலீட்டுச் சந்தையின் வளர்ச்சியை ஆதரிக்க **வரி ஆதாயங்கள்**
- **உலகளாவிய நிறுவனர் திட்டம்** துவக்கம்

## உள்கட்டமைப்பில் முதலீடு செய்தல்

- **சாங்கி விமானநிலைய மேம்பாட்டு நிதிக்கு $5 பில்லியன் நிரப்புத்தொகை**
- **எதிர்கால எரிசக்தி நிதிக்கு $5 பில்லியன் நிரப்புத்தொகை**




# நீடித்த நிலைத்தன்மையுடைய நகரை நிர்மாணித்தல்




## பருவநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுத்தல்

- **$5 பில்லியன் நிரப்புத்தொகை – கடலோர, வெள்ளப் பாதுகாப்பு நிதி**



## போக்குவரத்துத் துறையைப் பசுமைப்படுத்துதல்



- தூய்மையான கனரக வாகனங்களைப் பயன்படுத்துவதை விரைவுப்படுத்த, புதிய **கனரக வாகனத்திற்கான புகை உமிழ்வற்ற திட்டம்; மின்சாரக் கனரக வாகனத்திற்கான மின்னேற்றி மானியம்**
- **சாலை வரிக்கான நிரந்தர அதிகரிப்பு** 2026 முதல் மூன்று ஆண்டுக்குக் கட்டங்கட்டமாக மின்சாரக் கனகரக சரக்கு வாகனங்களுக்கும் பேருந்துகளுக்கும் அறிமுகப்படுத்தப்படும்

## அனைவருக்காகவும் நீடித்த நிலைத்தன்மையை அரவணைத்தல்

- **$400 பருவநிலைப் பற்றுச்சீட்டுகள்** ($100 நிரப்புத்தொகை உள்பட) - வீவக வீடுகளுக்கு
- **$400 பருவநிலைப் பற்றுச்சீட்டுகள் –** தனியார் வீடுகளில் வசிக்கும் சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கு



MOF
MINISTRY OF FINANCE
SINGAPORE

மேல்விவரங்களுக்கு
**www.singaporebudget.gov.sg**

go.gov.sg/2025budgetbooklet

18 பிப்ரவரி 2025 அன்று கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில்